# Karai Welfare Society(UK)
## காரை நலன்புரிச்சங்கம் (UK)
127 Cassiobury Drive, Watford, Herts WD17 3AH, UK
Tel 01923 226000, Fax 01923 238289, email: info@karainagar.org
www.karainagar.org Charity No 1126413


15/03/2017

திரு N . வேதநாயகன்
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

கனம் அரசாங்க அதிபர் அவர்கட்கு,

கடந்த வருடம் 05 /11 /2016 அன்று எமது நிர்வாகம் , காரைநகர் அபிவிருத்தி சபையில் நடைபெறும் நிர்வாக சீர்கேடுகள் பற்றி தங்கள் கவனத்திற்குகொண்டுவந்து, அதற்கு ஆவனசெய்யுமாறு தங்களை பணிவுடன் வேண்டியிருந்தோம். இதுவரை தங்களிடம் இருந்து எதுவித பதிலும் எமக்கு கிடைக்கப்பெறவில்லை என்பதனையிட்டு மிகவும் மனவருத்தமடைகின்றோம்.
இந்நிலையில் காரை அபிவிருத்தி சபை 27 / 03 / 2017 திங்கட்கிழமை பி,ப 3 :00 இக்கு தங்கள் பொதுக் கூட்டத்தினை நடத்தவுள்ளதாக பத்திரிகைகள் மூலமும், இணையத்தளமூலமும் அவசர அவசரமாக அறிக்கைகள் விடுத்துள்ளார்கள். இன்னமும் இரண்டு வாரங்கள் மட்டுமே உள்ள நிலையில், பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கம் சிலபல உண்மைத்தன்மைகளை தங்களுடனும், மக்களுடனும், ஊடகங்களுடனும் பகிர்ந்துகொள்ள, வெளிக்கொண்டுவர முனைகின்றது. காரணம் இந்த தற்போதைய நிர்வாகம் கடந்த 21 மாதங்களாக குறிப்பிடத்தக்க ஒரு அபிவிருத்தியோ அல்லது ஆக்கபூர்வமான செயல்பாடுகளோ இன்றி மாறாக புலம்பெயர் மன்றங்களிடமிருந்த நல்லுறவுகளையும், அவர்களின் ஆக்கபூர்வமான செயற்றப்பாடுகளையும் , நிதி அனுசரணைகளையும் இழந்து இந்த சபையை நட்டாற்றில் விட்டுவிட்டு ஓட முயல்கின்றனர்.

07 /06 /2015 அன்று ஜனநாயகமுறையற்ற முறையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நிர்வாகப் பொறுப்பேற்ற திரு ப விக்னேஸ்வரன் அவர்கள் தலைமையிலான நடைமுறை நிர்வாகம் பொறுப்பேற்ற ஒருசில மாதங்களில் பிரித்தானிய காரை நலன்புரிச்சங்கத்திற்கான நான்கு (4) வங்கிக் கணக்குகளை எமது நிர்வாகத்துடன் எந்தவித கலந்தாலோசனைகளும் இன்றி மூடப்பட்டு, ஒரு வங்கிக்கணக்கின்கீழ் கொண்டுவரப்பட்டது. இந்த செயற்பாடானது இன்னமும் எமது நிர்வாகத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவும் இல்லை. இந்த அர்த்தமற்ற செயலுக்கான காரணமும் இன்னமும் விபரிக்கப்படவில்லை.

கடந்த நிர்வாகத் தலைவர் திரு சிவா தி மகேசன் தலைமையிலான நிர்வாகம் 31 /03 /2015 அன்று (தற்போதைய நிர்வாகம் பொறுப்பேற்பதற்கு மூன்று மாதத்திற்கு முன்னர் ) எமது நிர்வாகத்திற்கு அனுப்பிவைத்த வங்கிக் கணக்கு விபரங்களை இங்கே தங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றோம். இதற்கான ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

1 ) இலங்கை வங்கி சேமிப்பு நடைமுறைக்குகணக்கு 31 .03 .2015 - **ரூபா** 480850 . 79
**(நான்கு இலட்சத்து எண்பதுனாயிரத்து எண்ணூற்று ஐம்பது ரூபாய்கள் )**

2 ) தேசிய சேமிப்பு வங்கி நிலையான வைப்பு 31 .03 .2015 - **ரூபா** 1308000 .00
**(பதின்மூன்று இலட்சத்து எண்ணாயிரம் ரூபாய்கள் )**
**இக் கணக்கிற்கு நூல் நிலைய கணக்கில் இருந்து மேலும் வரவு வைக்கப்பட வேண்டிய தொகை **ரூபா -** 1000000 .00 . ( **பத்து இலட்ச்சம் ரூபாய்கள்)**
இந்த தொகையானது அன்றைய பொருளாளர் திரு ந. பாரதி அவர்களால் இந்த சேமிப்பு வைப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு, தனியார் கட்டிட ஒப்பந்தக்காரர்கள் என்ற பல கட்டிட நிர்மாண புனரமைப்பு வேலைகளுக்காக ( Building contracts on commission basis ) பயன்படுத்தப்பட்ட்து. இதன்பின்னர் அந்த கமிஷன் ( 25 %) தொகையுடன் சேர்த்து நூலக கட்டிட நிர்மானத்திற்கு பயன் படுத்தப்படுமென கூறப்பட்டது. இந்தத்தொகை கணக்கில் இன்னமும் இடப்பட்டவில்லை. இதற்கான காரணங்களும் இன்னமும் அறியத்தரப்படவும் இல்லை. இப்பணம் ரூபாய் ஒரு மில்லியன் வைப்புக் கணக்கில் இருந்து எடுக்கும் போதும் எந்தவித அறிவித்தல்களும் எமது நிர்வாகத்திற்கு வரவில்லை.

*** மேலும் இக்கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய நிலுவைத்தொகை **ரூபா**1204910 .01
( **பன்னிரண்டு இலட்ச்சத்து நாலாயிரத்து பத்து ரூபாய்கள் )**
கடந்த நிர்வாகத்தினரால் (திரு சிவா தி மகேசன் அவர்கள் தலைமையிலான ) குடிதண்ணீர் வரவு மற்றும் தனியார் கடன்கள் வழங்கிய தொகை.

3 ) இலங்கை சேமிப்பு வங்கி கணக்கு 31 .03 .2015 -**ரூபா** 462856 .79
**(நான்கு இலட்சத்து அறுபத்துஇரண்டாயிரத்து எண்ணூற்று ஐபத்துஆறு)**

Karai Welfare Society(UK)
காரை நலன்புரிச்சங்கம் (UK)
127 Cassiobury Drive, Watford, Herts WD17 3AH, UK
Tel 01923 226000, Fax 01923 238289, email: info@karainagar.org
www.karainagar.org Charity No 1126413

4 ) பிரித்தானிய காரை நலன் புரிச்சங்கத்தின் வேலைத்திட்ங்களுக்கு அனுப்பிய தொகைகளில் ஏஞ்சிய மிகுதித் தொகைகள் 31 .03 .2015 - **ரூபா** 151799 .52
**( ஒரு இலட்ச்சத்து ஐம்பதுஓராயிரத்து எழுநூற்று தொண்ணூற்றுஒன்பது ரூபாய்கள் )**

5 ) மேலும் கடந்த கால நிர்வாகங்கள் அனைத்தும் தண்ணீர் விநியோகத்தில் இருந்து ஒவ்வொரு மாதமும் ரூபாய் ஒரு இலட்சம் மூலம் வாகன தேய்மான சேமிப்பு என சேமித்து வந்துள்ளது. இந்த வகையில் கடந்த 23 மாதங்களாக திரு ப விக்னேஸ்வரன் அவர்கள் தலைமையிலான இவ் நிர்வாகம் சேமித்திருக்கப்பட வேண்டிய தொகை - **ரூபா** 2300000 .00
**(இருபத்து மூன்று இலட்சங்கள் )**

ஆக மொத்தம் கையிருக்க வேண்டிய தொகை **ரூபாய்** 6 ,908 ,417 .01 ( **அறுபத்துஒன்பது இலட்சத்துஎண்ணாயிரத்து நானூற்று பதினேஎழு ரூபாய் ஒரு சதம்)**
ஆகவே கனம் அரச அதிபர் அவர்களே இந்த மேற்குறிப்பிட்ட கணக்குகள் எம்மால், அல்லது எம்மாலும் அவர்களாலும் நியமிக்கப்படும் தனியார் கணக்கறிக்கையாளரின் ( Independent auditors ) கணக்கறிக்கைகள் ஆராயப்பட்டு எமக்கு சமர்ப்பிக்கும் வரைக்கும் எமது பிரித்தானிய காரை நலன் புரிச்சங்க நிர்வாகம், காரை அபிவிருத்தி சபையின் பொதுக்கூட்டத்தினை தாங்கள் வலியுறுத்தி தள்ளிப்போட வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இங்கே, காரை அபிவிருத்தி சபையின் இன்னுமொரு முக்கியமான நிர்வாக சீர்கேட்டினை தங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம், நாம் அறிந்து இதுவரை காலமும் எந்த நாட்டிலும் எந்த சமூகத்திலும் கிழமை நாட்களில் ஒரு பொது மன்றத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் அலுவலக நேரத்தில் நடைபெற்றதாக நாம் அறியவில்லை!!! எதையோ தவிர்ப்பதற்காகவோ அல்லது நிர்வாகத்தில் முகமன் செலுத்தும் ஒருசில நபர்களிற்காகவோ இது இவ்வாறு ஒரு சமுதாயத்திற்குமாறாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
இதைத்தான் நாம் ஜனநாயகமற்ற முறை என்கிறோம் !!

பொதுக்கூட்ட விளம்பர அறிக்கையில் "'அங்கத்தவர் அல்லாதவர்கள் யாப்பின் பிரகாரம் கூட்டத்தில் பங்கேற்க முடியாது "' என அறிவித்துள்ளார்கள் , வரவேற்றுகின்றோம், ஆனால் கடந்த 07 /06 /2015 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பொருளாளர் க.பாலச்சந்திரன் , மற்றும் போஷகர் தி .பரமேஸ்வரன் , அன்றைய கூட்டத்தினை ஒழுங்கற்ற முறையில் நடாத்திச்சென்ற தி .துவாரகேஸ்வரன் உட்பட அத்தருணத்தில் அங்கத்தவர்கள் அல்லர். உண்மையில் அன்றைய பொதுக்கூட்டத்தில் போஷகர் தெரிவே நடைபெறவில்லை.(வீடியோ காணொளி இன்னமும் இருந்தால் உரியவர்கள் மீள் கண்ணோட்டம் செய்யவும் ) இரவோடிரவாக திரு பரமேஸ்வரன் அவர்களின் வேண்டுதலிற்கிணங்க திரு ந பாரதி அவர்கள் திரு தி பரமேஸ்வரன் அவர்களை நியமித்தார். அவரே இவருக்கான அங்கத்தவர் தொகையையும் செலுத்தியுமுள்ளார். இதை கூட்டம் முடிந்து ஒரிருசில தினங்களில் நாம் கேள்வியுற்றபொழுது தலைவர் திரு விக்னேஸ்வரன் அவர்களை வினாவியபோது அவரின் வாக்குமூலம். அடுத்து யாப்பின் பிரகாரம் ஒரு அரசியல்வாதியோ அல்லது அரசியல் கட்சி சார்ந்தவர்களோ நிர்வாகத்தில் எந்த பொறுப்பும் வகிக்க இயலாது. மற்றும் ஒரு போஷகர் எனப்படுவர் அந்த அமைப்பில் குறைந்தபட்ஷம் மூன்று வருடங்களாவது அவ்வமைப்பின் முக்கிய பதவிகளின் சேவையாற்றியிருக்க வேண்டும், குறைந்த பட்ஷம் ஒருவருடம் பணம் செலுத்தி அங்கத்தவராகவாவது இருந்திருக்க வேண்டாமோ??
இதைத்தான் நாம் ஜனநாயகமற்ற முறை என்கிறோம் !!

பிரித்தானிய காரை நலன் புரிச்சங்கத்தினால் குடிநீர் சேவைக்கென வழங்கப்பட்ட இரு நீர்த்தாங்கி வாகனங்களும் இன்று சீரான பராமரிப்பற்ற நிலையில் எந்நேரமும் சேவையில் இருந்து நீக்கப்பட வேண்டிய கட்டத்தில் உள்ளது. அதுமட்டுமல்ல குடிநீர் விநியோகம் இன்று குடிநீருக்கென மக்களுக்கு வழங்கப்படவில்லை, ஒரு ஒழுங்கு முறையற்ற நிலையில், தனியார் நிறுவனங்களுடன் ஏட்டிக்குபோட்டியாக தாம் கூடியளவு நீரை வழங்குதாக நினைத்து, அனாவசிய தேவைகளுக்கு இக்குடிநீரை விநியோகம் செய்கின்றனர்.

பல இலட்சம் ரூபாய்களில் கட்டிக்கொடுக்கப்படட வலந்தலை பேரூந்து நிலையம் இன்று தனியார் கையில். கடந்த வருடம் அபிவிருத்தி சபையின் அனுமதியின்றி தனி நபர் ஒருவர் தனது சொந்த தேவைக்காக சுற்றுமதிலை இடித்து, நடைபாதை நிலத்திற்கு போடப்பட்ட கற்களை கிளறி பலமாத காலம் அலங்கோலமாக காட்சியளித்தது.

18 மில்லியன் ரூபாய்களில் கட்டிக்கொடுக்கப்பட்ட நூல் நிலையம் இன்று எடுப்பார் கைப்பிள்ளைபோல் அதன் முழுமையான சேவை தவிர்ந்த ஏனையவற்றிற்கு காரை அபிவிருத்தி சபையினரால் மிக நன்றாக பயன்படுத்தப்படுகிறது.

Karai Welfare Society(UK)
காரை நலன்புரிச்சங்கம் (UK)
127 Cassiobury Drive, Watford, Herts WD17 3AH, UK
Tel 01923 226000, Fax 01923 238289, email: info@karainagar.org
www.karainagar.org Charity No 1126413

எமது பிரித்தானியா காரை நலன் புரிச்சங்கத்தின் நிதி அனுசரணையுடன் கடந்த 27 வருட காலங்களுக்கு மேலாக இதுவரை காலமும் 40 மில்லியன் ரூபாய்களுக்கு மேலாக குடி தண்ணீர் விநியோக வாகனங்கள், நூலகம் , பேரூந்து நிலையம், வலந்தலை வைத்தியசாலைக்கு 1 மில்லியன் ரூபாய்கள் நிரந்தர வைப்பில், காரை இந்துக்கல்லூரிக்கு 1 மில்லியன் ரூபாய்கள் நிரந்தர வைப்பில், எனப்பல னோரன்ன சேவைகளை புரிந்துவந்துள்ளோம். இவற்றையெல்லாம் உரியமுறையில் பராமரிக்காமல் பாதுகாக்காமல் நடடாற்றில் விட்டுவிட்டு நழுவ முயல்கின்றனர் இந்த நிர்வாகத்தினர். இவற்றை சரிசெய்து சரியான முறையில் அடுத்துவரும் நிர்வாகத்திடம் கையளிக்க வேண்டுமென்பதே எமது கோரிக்கை.

பொது அமைப்புக்களில் இவ்வாறான பாரிய அபிவிருத்தி திட்டங்களை தங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்காக பின்னடையச் செய்பவர்களை சமுதாயம் இனம் கண்டு தக்கபாடம் புகட்ட வேண்டும். குறிப்பாக அரச உத்தியோகங்களில் இருந்துகொண்டு பொது அமைப்புக்களில் இவ்வாறான தவறிழைப்பவர்கள் நிச்சியமாக தண்டிக்கப்படவேண்டும். இவர்கள் எல்லாம் ஒரு இனத்தின், ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு தடையாக இருப்பவர்கள்.

எனவே தங்களிடம் இருந்து வரும் செய்வாய்க்கிழமை 21 /03 /2017 இக்கு முன்பதாக சுமூகமான ஒரு பதிலை எதிர்பார்த்திருக்கின்றோம்.

நன்றி.

பிரித்தானிய காரை நலன்புரிச்சங்க நிர்வாகம் சார்பாக,

ப. சிவானந்தராசா
செயலாளர்
பிரித்தானிய காரை நலன்புரிச்சங்கம்